# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,116 — 1920 ம் ௵ ஆடிமீ 16 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1896 ம் வருஷத்தின் 20 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 30 ம் பிரிவின் 21 ம் உபபிரிவின்படி நுவரஎலியா சீர்திருத்தல் சபையால் உண்டாக்கப்பட்டு அதிகார மந்திரசபையின் ஆலோசனையோடு உத்தமனுர் ஆட்சியதிகாரியவர்களுடைய அனுமதிபெற்ற துணைச்சட்டம்.

உத்தமனுர் கட்டளைப்படி,
பி. ஹொஸ்பரோ,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கொழும்பு, கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1920 ம் ௵ ஜுலாய்மீ 9 ந் தேதி.

மேற்சொல்லிய துணைச்சட்டம்.

(1) கூலிக் கரத்தைகளிலேயாவது வாகனங்களிலேயாவது யாதாமொருவர் துப்பவும்கூடாது காறவும்படாது.

(2) வைத்திருக்கக்கூடும் படிக்கங்களில் அல்லாது பொதுவான பிரசித்த சந்தைகளிலே அல்லது வேறு பிரசித்த கட்டிடங்களிலே அல்லது அவைகளின் எல்லைக்குள்ளேயாவது யாதாமொருவர் துப்பவும்கூடாது காறவும்படாது.

---

1916 ம் வருஷத்தின் 15 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தால் புதுப்பிக்கப்பட்ட 1896 ம் வருஷத்தின் 20 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 30 ம் பிரிவின் 20 (C) ம் உபபிரிவின் பிரகாரம் நுவரஎலியா சீர்திருத்தல் சபையால் உண்டாக்கப்பட்டு அதிகார மந்திரசபையுடைய ஆலோசனையோடு உத்தமனுர் ஆட்சியதிகாரி அவர்களின் அனுமதிப்பெற்ற துணைக்கட்டளைச்சட்டம்.

உத்தமனுர் கட்டளைப்படி,
பீ. ஹோர்ஸ்பரோ,
அக்றிங் கொலோனியல் சக்கிறுத்தார்.

கொலோனியல் சக்கிடுத்தார் கந்தோர்,
கொழும்பு. 1920 ம் ௵ ஜுலாய்மீ 9 ந் ௳...

குறித்த கட்டளைச்சட்டம்.

யாதாமொருவர் சீர்திருத்தல் சபையால் நியமிக்கப்பட்ட இடத்திலன்றி வேறு எந்த இடத்திலாவது, மரத்திலாவது கட்டிடங்களிலாவது, சுவரிலாவது, அறிவிப்பு பிரசித்த பத்திரங்களை அல்லது படங்களை ஒட்டவும் அல்லது காட்டவும் படாது.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கலவெல்லாவ என்னும் இடத்தில் பொலிஸ் ஸ்ரேசன் கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,141. குறிச்சி—மகாகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | ஹுணுவொட்டுக்கண்ட .. | வெறுநிலம் .. | கே. எஸ். பேருண்டோ .. | 0 0 2·3 |
| 5 | ௸ .. | ௸ .. | ௸ .. | 0 0 0·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ம் ௵ ஆவணி மாசம் 16 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1920 ம் ௵ ஆடி௴ 2 ௳.

ரி. ஏ. கொட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிரசித்த மலசலம் கழிக்குமிடம் கட்டுவது என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 11,507. குறிச்சி—டேவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | நாவடகேவத்தை .. | தென்னந்தோட்டம் .. | 1 சபேர்சாய்பு, அப்டுமசலேது, 2 குஞ்சி வாவா அப்டுல்ருகமான் கட்டுக்கொன | 0 0 15·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ம் ௵ ஆவணிமாசம் 5 ந் தேதியிலன்று 2 மணிக்கு காலி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1920 ம் ௵ ஆடி௴ 13 ௳.

ஆர். பி. ஹெலிங்ஸ்,
அரசாட்சி ஏசண்டு, தென்மாகாணம்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிரசித்த மலசலம் கழிக்குமிடம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 11,506. குறிச்சி—காலி நகரசங்கத்துக்குள் வெல்லபொட்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மகன்னயாகேவத்தை .. | தென்னந்தோட்டம் .. | 1 ஏ. எச். அர்னேலிஸ், 2 ஏ. எச். வஸ்தியான், 3 ஏ. எச். கர்லினு, 4 ஏ. எச். கரேஞ்சிகாமி, 5 ஏ. எச். மாமினேனுவும் என் நால்வரும் | 0 0 8 7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ம் ஹூ ஆவணிமாசம் 6 ந் தேதியிலன்று 2 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக் காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையை யும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1920 ம் ஹூ ஆடிமீ 13 ந் உ.

ஆர். பி. ஹெலிங்ஸ்,
அரசாட்சி ஏசண்டு, தென்மாகாணம்.

---

உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

---

[அறிவித்தல் இல. 7,568, இரத்தினபுரி.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண் டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1920 ம் ஹூ (சூலை) ஆடிமீ 16 ந் தேதிமுதல் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எம். ரி. ஆச்சியபோல்ட் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோ ரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணி களை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எம். ரி. ஆச்சியபோல்ட்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்து கொள்க.

சுட்டிய காணிகளின் விவரம்.

சப்பிரகாமுவா மாகாணம் றத்தினபுரி டிஸ்திறிக் நவடுன்கோறளை, யுடப்பத்து நாறக்கொடக் கிராமத்திலிருக்கு மித்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

இலங்கை யளவைப் பிரதமபடம் 205A.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 4 | வாய்க்கால் (பகுதி) | 0 0 15 |
| 5 | ஷை (பகுதி) | 0 0 14 |
| 7 | பாதை | 0 0 39 |
| 9 | டெனவாக்ககங்கா (பகுதி) | 0 3 34 |
| 10 | முட்டுவாகேமகாயோவித, மட்டுவாகேயோவித, கறன்னெகேயோவித. டெபறககா யோவித | 3 0 25 |
| 11 | முட்டுவாகேமகாயோவித | 4 3 38 |
| 12 | டெனவாக்ககங்கா (பகுதி) | 0 1 13 |
| | | 9 3 18 |

எல்லைகளாவன: வடக்கு-குட்டபிதியாக் கிராம வெல்லை (வாய்க்காலின் பகுதி); கிழக்கு-குட்டபிதியாக் கிராம வெல்லை (வாய்ககாலின் பகுதி), டெனவாக்ககங்கா; தெற்கு-குட்டப்பிதியா (டெனவாக்ககங்காவின் பகுதி), போப்பித்தி யாக் கிராம வெல்லை; மேற்கு-போப்பித்தியாக் கிராம வெல்லை (டெனவாக்க கங்காவின் பகுதி), குட்டாப்பித்தியாக் கிராம வெல்லை.

கவனிப்பு.—மேற்கூறிய வெல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்சுட்டுங் காணித்துண்டுக ளிவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகும் 11 ஏக்கர் 11 பேட்சும் மேற்சொல்லிய 9 ஏக்கர் 3 றூட் 18 பேட்சுகளுள்ளு மடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது :—

இலங்கையளவைப் பிரதமபடம் 205A.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| A 1 | கல்பொத்தெக்கடவகதை (71,361 ம் உ. ப. ல். காணுங் காணியின் பகுதி) | 0 0 28 |
| A 2 | அறம்பெகும்புறெகொட | 0 0 12 |
| A 3 | படல்கெககும்புறெயோவித | 0 0 4 |
| A 6 | டொலொசகேகும்புறு, பின்அஸ்வெத்தும, அம்பகாவியட்ட, அறம்பெக்கும்புறு | 9 1 18 |
| A 8 | படல்கெகும்புறு | 1 1 29 |
| | | 11 0 11 |

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 725 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[இரத்தினபுரி வி. உ. 8—1920.]

## சுப்பிரீங்கோட்டு அறிவித்தல்.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் குருணாகல் டிஸ்திறிக்கடைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை 1920 ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 2 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாற்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

குருணாக்கல் பிஸ்கால் கந்தோர்,
1920 ம் ௵ ஜூலை௴ 8 ந் உ.

எஸ். டி. சமறசிங்க,
பிஸ்காலுக்காக.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் அநுராதபுர டிஸ்திறிக்கடைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1920 ம் ஆண்டு ஆவணிமாதம் 2 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்ததரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,

அநுராதபுர பிஸ்கால் கந்தோர்,
1920 ம் ௵ ஆடி௴ 8 ந் உ.

ஏச். ஆர். ஆர். புறூட்,
உப பிஸ்கால்.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி, நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் வதுளை டிஸ்திறிக்கடைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1920 ம் ஆண்டு ஆவணிமாதம் 2 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடர்கள்.

இங்ஙனம்,

வதுளை பிஸ்கால் கந்தோர்,
1920 ம் ௵ ஆடி௴ 8 ந் உ.

ஏச். சீ. விஜேசிங்க,
பிஸ்காலுக்காக.

---

H. R. COTTLE, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.